1986 நவம்பர் 18]

(ஊ) பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (விவாதம்)—தொடர்ச்சி).

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொண்டு, அது பற்றி சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

எங்களைப் பொறுத்தமட்டில், மதுரை மாநகரம் சீரும் சிறப்புமாக, கலைப் பொக்கிஷமாக விளங்குகின்ற ஒரு பெரிய நகரமாக இருக்கிறது. சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படாமல் தனி அதிகாரிகளின் அதிகாரத்திற்குள்ளே இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போலவே கோவை மாநகரும் தனி அதிகாரியின் அதிகாரத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

எங்களுடைய மதுரை மாநகரம் மாநகராட்சியாக்கப்பட்டு, இடையிலே ஒரு தேர்தலையும் சந்தித்து விட்டு, 4 மேயர்களையும் கண்டிருக்கிற ஒரு மாநகராட்சியாக விளங்கியது. இப்படிப்பட்ட தருணத்தில் நல்ல பல திட்டங்களைச் செயல் படுத்துவோம் என்று மக்களிடம் கூறினோம். இன்றைக்கு அந்தத் திட்டங்கள் எல்லாம் செயலிழந்து கிடக்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS